முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 157/2022

இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ம் நாள் இன்று இந்த வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனியம்மாள் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 23-09-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்திலும் நான் கையொப்பம் செய்தேனா இல்லை கைரேகை வைத்தேனா என்றால் கையெழுத்து செய்தேன், அதில் என்ன விவரங்கள் இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. என் அம்மாவின் சொந்த ஊர் என்ன என்றால் செவந்தாம்பாளையம் ஆகும். தாவாச் சொத்துக்கு என் அம்மா எதற்காக வந்தார் என்றால் அவருக்கு திருமணமானதால் வந்தார். திருமணமான பெண் கணவர் இருக்கும் இடத்திற்கு வந்தார்.

2) என் கணவரின் ஊர் என்ன என்றால் பெரிச்சிபாளையம். அங்கு தான் நானும் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் தான் வசித்து வருகிறேன். தாவாச் சொத்தில் நான் இல்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் தாவாச் சொத்தில் வசிப்பதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் க.எண்.1/1327 ல் குடியிருப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

3) 4 மற்றும் 5 பிரதிவாதிகள் வீடு கட்டிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவாச் சொத்தில் வசிப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீடு கட்டிய விவரமும் எனக்கு நன்றாக தெரியும். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்காக 1ம் வாதி என் தாயார் தாவா இடத்தை ரூ.40 ஆயிரத்துக்கு பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்து வீடு கட்டிக் கொள்ள அனுமதி அளித்தார் என்றால் சரியல்ல.

4) 4 மற்றும் 5 பிரதிவாதிகள் முறைகேடாக வீடு கட்டி இருந்தால் நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்போம் என்றால் சரியல்ல. உண்மையாக வீடு கட்டி இருந்தால் நடவடிக்கை எடுத்திருப்போம் அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கான பட்டா 1ம் வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்தில் எனக்கு சட்டப்படி உரிமையில்லை அதனால் நான் தாவாவில் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் கோரி உள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2 மற்றும் 3ம் வாதிகளை அவசியமில்லாமல் இந்த தாவாவில் கட்சி சேர்த்துள்ளோம் என்றால்சரியல்ல.

5) என் கணவர் கட்டிட மேஸ்திரி வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். 4 மற்றும் 5 பிரதிவாதிகளின் வீட்டை என் கணவர் கட்டவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு அந்த வீட்டை கட்ட கொடுக்காததால் இந்த தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.09.23 15:28:24 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.